# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்

தொகுதி – II



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. கலாவதி

முனைவர் சு. குமரன்

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. கலாவதி**<br>**முனைவர் சு. குமரன்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்**<br>கோயம்புத்தூர் - 43. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | 18 + 418 = 436 |
| விலை | : | உரூ. 300/- |

**ISBN : 978 - 93 - 85267 - 13 - 0**

## Aspects of prosperous Life in Tamil Literature International Conference

| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. G. Galavathi**<br>**Dr. S. Kumaran** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Avinashilingam Institute for Home Science and Higher Education for Women,** Coimbatore - 43. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | 18 + 418 = 436 |
| Prize | : | **Rs. 300/-** |


தமிழ்

முனைவர்

திருமதி மு

முனைவர்

முனைவர்

முனைவர்

அ

# பொருளடக்கம்


81. **முனைவர் ம. இராமலட்சுமி** 403
குறுந்தொகை மருதத் திணையில் ஊடல்

82. **மு. ஜெயலட்சுமி** 409
அகநானூற்றில் வரகு

83. **அ. தனலட்சுமி** 413
திருக்குற்றாலக் குறவஞ்சி காட்டும் வாழ்வியல்

84. **முனைவர் கி. மலர்விழி** 418
அசோகமித்திரனின் 'விடிவதற்குள்' சிறுகதை உணர்த்தும் வாழ்வியல் எதார்த்தம்

85. **வை. காயத்ரி** 422
தமிழர் மரபில் இயற்கையின் பதிவுகள்

86. **முனைவர் க. முருகேசன்** 428
ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் புறப்பாடல் உரைத்திறன்

87. **முனைவர் இரா. மணிமேகலை** 434
வேளாளர் புராணத்தில் ஏர்ப்படலம் காட்டும் வேளாண் நுட்பங்கள்

88. **முனைவர் சு. சதீஷ்குமார்** 439
வாகீசர் வாக்கில் வாழ்வியல் கூறுகள்

89. **கு. அரிகரசுதன்** 445
இலக்கியங்களில் விருந்தோம்பலின் மாண்புகள்

90. **முனைவர் ர. காளீஸ்வரி** 450
மணிமேகலையில் அறக்கோட்பாடு

91. **முனைவர் த. நாகம்மாள்** 455
நாட்டுப்புற இலக்கியத்தில் தெய்வ வழிபாட்டு முறைகள்

92. **முனைவர் வ. பிரேமலா பிரியதர்சினி & நா. ராஜேஸ்வரி** 459
சங்க இலக்கியத்தில் சிறுதானியத்தின் பயன்பாடு

93. **முனைவர் க. கிருத்திகா** 464
பெரியபுராணம் வழி வெளிப்படும் வாழ்வியல்

94. **சு. ருக்குமணி** 469
பட்டினப்பாலையில் புலப்படும் வாழ்வியல் சிந்தனைகள்

95. **முனைவர் ப. நந்தினி** 473
பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் மனித வாழ்வியல் கூறுகள்

# 87. வேளாளர் புராணத்தில் ஏர்ப்படலம் காட்டும் வேளாண் நுட்பங்கள்

முனைவர் இரா. மணிமேகலை
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029

## முன்னுரை

உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்ற நிலை மறந்து இன்றைய உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. உழுதுண்டு வாழும் நிலைக்கு பழுது ஏற்பட்டு விட்ட உலகமயமாக்கலின் காலமாய் மாறிவிட்டது. வேளாண்மை செய்யும் மக்களுக்கு உழுதூண் அல்லது வேறு தொழில் இல்லை என்று தொல்காப்பியம் சுட்டுகின்றது. ஆனால் உழவும் உழவனும் இக்காலத்தில் சந்திக்கும் இடர்கள் வேளாண்மை என்னும் உயிர்நிலையையே ஆட்டிப்படைக்கும் காரணிகளாகி விட்டன. வேளாண்மை என்ற செல்லே பிறர்க்கு உதவுகின்ற முயற்சியைக் குறிக்கின்றது. உடல் உழைப்பினால் உழவு செய்து உணவை விளைவிக்கின்ற முயற்சியானது உலகின் தலைச்சிறந்த அறத்தொழிலாகும். அவ்வகையில் வேளாள புராணம் எனும் நூல் வேளாளரின் உழவுத்தொழில் புரியும் உழவரது சிறப்பையும் அவர்களது வேளாண்மை அறிவையும் கூறுகின்றது. சமுதாயத்தின் அடிவேராக இருக்கும் வேளாளரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் இப்புராணம் கொங்குநாட்டு தாராபுரத்திற்கு அருகேயுள்ள வீராச்சிமங்கலத்தில் வாழ்ந்த கந்தசாமிக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. 1907 ஆம் ஆண்டு அச்சியற்றப்பட்ட இந்நூல் கவிஞர்கள், சான்றோர்கள், பொதுமக்கள் முன்னிலையில் அரங்கேறிய பெருமையுடையது. இந்நூலின் இதயப்பாசுரமாக விளங்குவது ஏர்ப்படலம் ஆகும். உலகிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் உணவளிக்கும் உழவுத் தொழிலின் இலக்கணத்தை விரிவாகக் கூறுவது ஏர்ப்படலமாகும். அப்படலத்தின் முதல் பாடலிலேயே

*"ஈட்டமாகிய தொழிலெல்லாம் இத்தொழி லின்றி*
*ஆட்டம் இல்லையென் றைந்தன மாருயிர் அடைந்த*
*கூட்டம் எத்தனை அத்தனைக்கும் குறையாமல்*
*ஊட்ட நின்றவல் லேர்த்தொழி லிலக்கணம்*
*உரைப்போம்" (ஏர்ப்படலம்)*

என்று உழவின் மேன்மையை உணர்த்துகிறார்.

தாமே உழைத்து உணவை விளைவித்து உலகிற்கு வழங்கும் வாழ்வே சொல்லப்பட்ட அறங்களில் எல்லாம் தலையானதாகும். அதுமட்டுமின்றி வேட்டைச் சமூகத்தில் ஒன்றையொன்று கொன்று